# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 125/மா/2022**
**நாள் : 14.09 .2022**

திரு. வ. ஆனந்தராஜ்,
அனகாபுத்தூர், சென்னை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, அனகாபுத்தூர், அண்ணாநகர், 7வது குறுக்குத்தெரு, கதவு எண்.12–ல் வசிக்கும் திரு. வ. ஆனந்தராஜ் என்பவரின் 04.08.2022 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.08.2022-ல் பெறப்பட்டு 125/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, அனகாபுத்தூர், அண்ணாநகர், 7வது குறுக்குத்தெரு, கதவு எண்.12–ல் வசிக்கும் திரு. வ. ஆனந்தராஜ் என்பவர் தனது முறையீட்டு மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

"நாங்கள் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறோம். அப்பொழுது செப்பனிடப்படாத சாலையாக அண்ணா நகர் முதல் தெரு இருந்தது. நாளடைவில் ஆக்கிரமிப்பாளர்களால் சாலைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அப்பொழுதிருந்த ஊராட்சி தலைவருக்கும், நிர்வாக அதிகாரிக்கும் தெரியப்படுத்தியும் சாலையை மேம்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். அதுமுதல் இன்று வரை பல அரசு அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி என உயர்ந்து வந்த நிலையிலும் அதன் தலைவர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் மூன்று முதல்வர்களுக்கும் மற்றும் அனைத்து அரசுத்துறை தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அனைவருக்கும் மனுச்செய்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

இந்த நிலையில் தற்பொழுது நகராட்சி, மாநகராட்சியாக உயர்ந்த நிலையில் மாநகராட்சி ஆணையாளருக்கும் தெரியப்படுத்தியும் எந்த முன்னேற்றமும் இல்லை. ஆகையால் எங்களின் குறைகளை தாங்கள் அருள்கூர்ந்து எங்களின் அடிப்படை வசதியற்ற நிலையை கவனித்து அடிப்படை வசதியான சாலை வசதி, கழிவு நீர் வசதி அமைத்துத் தருமாறு பணிவுடன் வேண்டுகிறோம். மழைக்காலங்களில் எங்கள் பகுதி சேராகவும் நீர் நிறைந்தும் இருப்பதால், தபால்காரர் கூட எங்கள் பகுதிக்கு தபால் விநியோகிக்க வருவதில்லை என்பதை மிகக்கவலையுடன் தெரிவிக்கின்றோம். 26.12.2021 அன்று மக்கள் குறை தீர்வு முகாமில் எங்களின் நிலைமைகளை மனுவாக அளித்துள்ளோம். மனு எண். 1059/A தேதி. 26.12.2021, 23.04.2022 அன்றைய தேதியில் மீண்டும் நினைவூட்டல் மனு அளித்துள்ளோம். தற்போது தங்களின் மேலான பார்வைக்கு எங்கள் குறைகளை தெரியப்படுத்தியுள்ளோம். தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்” என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 11.08.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. மாநகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்படவில்லை.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 11.08.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 24.08.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 24.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“ சென்னை அனகாபுத்தூர் அண்ணா நகர் குடியிருப்பில் சாலைகள் செப்பனிடப்படாமலும், ஆக்கிரமிப்பாளர்களால் சாலையின் இரு பக்கத்திலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும் உள்ளன. மேற்கண்ட சாலை செப்பனிடுதல் மற்றும் ஆக்கிரமிப்பு தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கடந்த 40 ஆண்டுகாலமாக புகார் மேல் புகார் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எங்கள் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் அங்குள்ள சிலர் மைதானத்திற்கு அருகில் உள்ள இடத்தை ஆக்கிரமித்து கால்பந்து கோல் கம்பம் அமைத்துள்ளனர். இதனால் அப்பகுதியில் பொதுமக்கள் நடமாட இடைஞ்சலாக உள்ளது. மேலும், மேற்கண்ட பகுதியில் சரியான சாலை வசதி இல்லாததால், மழைக்காலங்களில் அப்பகுதியில் தண்ணீர் சூழ்ந்து சேரும் சகதியுமாக நிறைந்து காணப்படுகிறது.

மேற்கண்ட எங்களது இடம் நத்தம் புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ளதால், எங்களுக்கு அடிப்படை வசதியான சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் கழிவு நீரை வெளியேற்றும் வசதிகளை மேற்கண்ட இடத்தில் செய்து தர ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளார்.

5) 24.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் தாம்பரம் மாநகராட்சியின் இளநிலைப்பொறியாளர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள அனகாபுத்தூர் குடியிருப்புகளில் சில குடியிருப்புகள் நீர்நிலை புறம்போக்கு இடத்திலும், வேறு சில குடியிருப்புகள் நத்தம் புறம்போக்கு இடத்திலும் அமைந்துள்ளது. மேற்கண்ட மனு தொடர்பாக அனகாபுத்தூர் அண்ணாநகர் குடியிருப்பிற்கு சென்று என்னால் கள ஆய்வு செய்யப்பட்டது. கள ஆய்வில் மனுதாரரால் அடிப்படை வசதியை கோருமிடம் நீர்நிலை புறம்போக்கு இடம் எனவும், நீர்நிலை புறம்போக்கு இடத்தில் மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்திட வழிவகையில்லை என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனினும், மீண்டும் ஒருமுறை மேற்கண்ட இடத்தை கள ஆய்வு செய்து, வருவாய் துறையிலிருந்து 30 நாட்களில் சான்று பெற்று, மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள இடம் நத்தம் புறம்போக்கு வகையைச் சார்ந்திருந்தால், மனுதாரர் கோரியுள்ள அடிப்படை வசதிகளை மாநகராட்சி உடன் செய்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், தாம்பரம் மாநகராட்சி இளநிலைப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் அனகாபுத்தூர் அண்ணா நகர் குடியிருப்பில் சாலைகள் செப்பனிடப்படாமலும், ஆக்கிரமிப்பாளர்களால் சாலைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பாக கடந்த 40 ஆண்டுகாலமாக புகார் மேல் புகார் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தங்கள் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் அங்குள்ள சிலர் மைதானத்திற்கு அருகில் உள்ள இடத்தை ஆக்கிரமித்து கால்பந்து கோல் கம்பம் அமைத்துள்ளனர் என்றும் இதனால் அப்பகுதியில் பொதுமக்கள் நடமாட இடைஞ்சலாக உள்ளது எனவும் மேற்கண்ட பகுதியில் சரியான சாலை வசதி இல்லாததால் மழைக்காலங்களில் அப்பகுதியில் தண்ணீர் சூழ்ந்து சேரும் சகதியுமாக நிறைந்து காணப்படுகிறது என்றும் இதனால் தபால்காரர் கூட தபால் விநியோகிக்க வருவதில்லை என தெரிவித்து அடிப்படை வசதியான சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் கழிவு நீரை வெளியேற்றும் வசதிகளை செய்து தர இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் தங்கள் பகுதிக்கு மேற்கண்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர பல ஆண்டுகளாக போராடியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

7) அனகாபுத்தூர் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி என உயர்ந்து வந்த நிலையிலும் மனுதாரர் குறிப்பிடும் அண்ணா நகர் சாலை கடந்த 40 ஆண்டுகளாக செப்பனிடப்படாத சாலையாக உள்ளது. ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சியிலிருந்து மாநகராட்சியாக உயர்ந்தும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதிகள், பாதாள சாக்கடை போன்ற வசதிகள் கிடைக்கப்பெறவில்லை. மேற்கண்ட வசதிகளை செய்து தரும் தார்மீக பொறுப்பு ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி அலுவலர்களுக்கு இருந்தும் மேற்கண்ட வசதிகளை செய்து தராமல் மக்கள் அலைகழிக்கப்பட்டுள்ளனர். அந்த வசதிகள் இதுநாள் வரையில் அவர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. இது ஏற்கக்கூடிய செயல் அல்ல. இதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 4.8.2022 அன்று மனு செய்த பின்புதான் தாம்பரம் மாநகராட்சி இளநிலை பொறியாளர் அந்த பகுதிக்கு சென்று கள ஆய்வு செய்துள்ளதை அவரது வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது. இது கண்டிக்கத்தக்கது.

8) அனகாபுத்தூர் அண்ணா நகர் 7வது குறுக்குத்தெருவில் வசிக்கும் மக்கள் வீட்டுவரி, குடிநீர் கட்டணம் செலுத்தியும் சாலை, கால்வாய் வசதி செய்யப்படவில்லை என்றும் அங்கு 50-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன என்றும், அருகில் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள இடத்தை ஆக்கிரமித்து கால்பந்து கோல்கம்பம் அமைத்துள்ளனர். இதனால் பொதுமக்கள் நடமாட இடைஞ்சலாக உளளது. அந்த ஆக்கிரமிப்பினை அகற்றியும் சாலை, கால்வாய் வசதி போன்ற அடிப்படை வசதிகளை அமைத்து தர வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளதை தினமலர் செய்தி நாளிதழ் வாயிலாகவும் அறியமுடிகிறது.

9) மனுதாரர் திரு. வ. ஆனந்தராஜ் தங்களது இடம் நத்தம் புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ளது என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தாம்பரம் மாநகராட்சி இளநிலை பொறியாளர் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்ட இடத்தை கள ஆய்வு செய்ததில் மனுதாரரால் அடிப்படை வசதி கோருமிடம் நீர்நிலை புறம்போக்கு இடம் எனவும், எனினும் மீண்டும் ஒருமுறை மேற்கண்ட இடத்தை கள ஆய்வு செய்து வருவாய் துறையிலிருந்து 30 நாட்களில் சான்று பெற்று மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள இடம் நத்தம்புறம்போக்கு வகையைச் சார்ந்திருந்தால் மனுதாரர் கோரியுள்ள அடிப்படை வசதிகளை மாநகராட்சி உடன் செய்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். ஏற்கனவே நகராட்சியாக இருந்தபொழுது பணிபுரிந்த அலுவலர்கள், நீர்நிலைகளை ஆக்கிரமித்து அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டுமான பகுதிகளை உரிய காலத்தில் கண்டறியத் தவறியுள்ளனர். நீர்நிலைகளை ஆக்கிரமித்து அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டுமான பகுதிகளை உரிய காலத்தில் கள ஆய்வுகள் மேற்கொண்டு அதனை கண்டறிந்து ஆக்கிரமிப்புகளை அகற்றிட தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருந்த சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது நடைமுறையிலுள்ள உரிய சட்ட விதிகளின்படி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

10) மேலும் இளநிலைபொறியாளர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு 30 நாட்களுக்குள் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தை மீண்டும் ஒரு முறை கள ஆய்வு செய்து, வருவாய் துறையிலிருந்து சான்று பெற்று, மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள இடம் நத்தம் புறம்போக்கு வகையைச் சார்ந்திருந்தால், மனுதாரர் கோரியுள்ள அடிப்படை வசதிகளை 3 மாதத்திற்குள் செய்து தர தக்க நடவடிக்கை எடுக்க தாம்பரம் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் பொதுமக்கள் தங்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, போன்ற அடிப்படை வசதிகளை அந்தந்த பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்திட ஆவன செய்யுமாறு அந்தந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளலாம்.

வட்டாட்சியர் அலுவலக நில அளவையர்களை வைத்து குறிப்பிட்ட 1 மாத காலத்திற்குள் இப்பணி செய்து முடிக்கப்பட வேண்டும். வட்டாட்சியர் அலுவலகம் தாமதம் செய்தால் இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரின் நேரடிக்கவனத்திற்கு

எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்க ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். இதைவைத்து காலதாமதம் செய்தால் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 –ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. வ. ஆனந்தராஜ்
   தலைவர், அனகாபுத்தூர் அண்ணா நகர்
   7வது குறுக்குத்தெரு குடியிருப்போர் நலச்சங்கம்,
   எண்.12, 7வது குறுக்குத்தெரு, அண்ணாநகர்,
   அனகாபுத்தூர், பம்மல், சென்னை – **600 075.**
2. ஆணையர்,
   தாம்பரம் மாநகராட்சி,
   தாம்பரம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – **600 028.**
4. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – **600 028.**
5. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரகம்,
   ஜி.எஸ்.டி. சாலை, செங்கல்பட்டு – **603 001.**
6. மாவட்ட வருவாய் அலுவலர்,
   செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரகம்,
   ஜி.எஸ்.டி.சாலை, செங்கல்பட்டு – **603 001.**
7. கோட்டாட்சியர்,
   கடப்பேரி, தாம்பரம்,
   சென்னை – **600 045.**

**நகல்**

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

14/9/22
செயலாளர்